2017 ஜனவரி 31]

செவிலியர் பணியிடங்களில் 37 செவிலியர்கள் பணியில் இருக்கிறார்கள். ஆகையினால், எல்லா பணியிடங்களிலும் பணியாளர்கள் சிறப்பாகப் பணி செய்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அம்மருத்துவமனைக்கு கூடுதல் வசதிகளைக் கேட்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்து கொடுத்திருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேலும் வசதிகளை செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

கொள்முதல் மையம்

***4926—திரு. என். சுரேஷ் ராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மா, பலா மற்றும் வாழைப் பழங்களுக்கான கொள்முதல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று தவ வாழ்வு வாழ்ந்து, மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்து, தன் வாழ்நாளையே மக்கள் பணிக்காக அர்ப்பணித்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழகம் வளர்வதற்கு, வேளாண்மை வளர்வதற்கு, இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால்,

இந்தியாவிலேயே தமிழகம் தலைநிமிர்ந்து நிற்பதற்கு தன்னிகரில்லா தலைவராகத் திகழ்ந்தவர்தான் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்கு வரப்பிரசாதமாகக் கிடைத்த தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களை வணங்குகிறேன். அவருக்காக, அவருடைய நல்வாழ்வுக்காக மட்டுமல்லாமல், கழக வளர்ச்சிக்காகவும் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு 33 ஆண்டு காலம் தியாக வாழ்வு வாழ்ந்த, மக்கள் தலைவி, கழகத்தினுடைய பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மாம்பழம், பலாப்பழம் மற்றும் வாழைப்பழம் ஆகியவற்றிற்கான கொள்முதல், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறைமூலம் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.*

திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா வகையான தோட்டப் பயிர்களும் உற்பத்தியாகின்ற ஒரே மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். அப்படிப்பட்ட சிறப்பிற்குரிய அந்த மாவட்டத்தில், இன்றைய காலக்கட்டத்தில், விவசாயிகள் இதுவரையிலும் சந்திக்காத அளவிற்கு மிகப் பெரிய பாதிப்பு, மழை இல்லாத காரணத்தால் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட விவசாயப் பெருமக்களுக்கு நஷ்டஈடாக அவர்களுடைய பயிர்களுக்குத் தகுந்தாற்போல், ஏக்கருக்கு ஐந்தாயிரம் ரூபாய்தான் வழங்குவதாக அரசு அறிவித்திருப்பதாக அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் மூலமாகத் தெரிய வருகிறது. எனவே, ஐந்தாயிரம் ரூபாய் என்பதை உயர்த்தி வழங்க இந்த அரசாங்கம் முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாரோ*

அதிகாரிகள் சொன்னார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். வருவாய்த் துறை மூலமாகவும், வேளாண்மைத் துறை மூலமாகவும் ஆங்காங்கே துல்லியமாக கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது. அத்தனையும் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் சரி பார்க்கப்பட்டு, மேலும் 3 பேர் அந்தக் குழுவில் நியமிக்கப்பட்டு, அவர்களின் அறிக்கைகளும் தலைமைக்கு வந்துகொண்டிருக்கின்றன. அறிக்கைகள் வந்தவுடன், விவசாயிகளுக்கும், விவசாய மக்களுக்கும் என்றைக்கும் வாழ்வாதாரத்தைத் தந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, நீங்கள் எண்ணுகின்றபடி, விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், குறிப்பாக, அனைத்து வேளாண் விளைபொருட்களுக்கும் தக்க நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.*

திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேநேரத்தில், விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய மானியங்கள்கூட உடனுக்குடன் கிடைப்பதாகத் தெரியவில்லை. அதற்கு என்ன காரணம் சொல்கின்றார்கள் என்று சொன்னால், தோட்டக்கலைத் துறையில் நிறைய காலியிடங்கள் இருப்பதாகச் சொல்கின்றார்கள். போதுமான அதிகாரிகள் இல்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றுசொன்னால், 400 உதவி இயக்குநர் பதவிகளில் 330 பதவிகள் காலியாக இருக்கின்றன. அதேபோன்று 40 துணை இயக்குநர் பதவிகளில் 13 இடங்கள் காலியாக இருக்கின்றன. 1,200 உதவி அலுவலர் பதவிகளில் 800 பணியிடங்கள் காலியாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு கிடைக்க வேண்டிய பயன்கள் எல்லாம் உடனுக்குடன் கிடைக்காமல், காலதாமதமாகிக்கொண்டிருப்பதாகக் கூறுகின்றார்கள். இதனை உடனடியாக அரசாங்கம் நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2017 ஜனவரி 31

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு, அவரவர் நிலத்திற்குத் தேவையான மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஏதாவது தவறு நடந்திருந்தால், மானியங்கள் கிடைக்கவில்லை என்று சொன்னால், எங்களுக்கோ அல்லது அங்கே இருக்கின்ற* Joint Director *அவர்களுக்கோ தகவல் தெரிவித்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பதவி உயர்வு காரணமாக, சில பணியிடங்களில் காலி இடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை நிரப்பப்பட்டு வருகின்றன. குறிப்பாக, உதவியாளர் பணியிடங்கள் முழுமையாக நிரப்பப்பட்டு, இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் பணி நியமன ஆணையை வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கின்றது என்பதைச் சொல்லி, உங்களுடைய கோரிக்கைகள் அனைத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

தனி வட்டம்

***4918—திரு. கே. பழனி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர், மாங்காடு, கொளப்பாக்கம் ஆகிய குறு வட்டங்களை இணைத்து குன்றத்தூரை தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைக் காத்து வந்த தமிழர் குல சாமி மாண்புமிகு அம்மா அவர்களுடைய*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS